2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இன்று வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) வேறு ஒன்றும் இன்றைக்கு இல்லை. இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன, உட்காருங்கள்.*

3. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.*

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் நகர்ப்புற வளர்ச்சி குறித்த முப்பத்து ஆறாவது அறிக்கையினையும், ஊரக வளர்ச்சி நிதியொதுக்கீடு குறித்த முப்பத்து ஏழாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் முப்பத்து ஆறு மற்றும் முப்பத்து ஏழாவது அறிக்கைகளை அச்சடித்து பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2005–2006, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

2006 ஜனவரி 27]

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை@ ஒன்று இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 3,696.50 கோடி ரூபாய் நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 2,510.05 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 235.08 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் மற்றும் எஞ்சிய தொகையான 951.37 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ள சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு படிப்பு உதவித் தொகை மற்றும் பயிற்சி உதவித் தொகை வழங்குவதற்காக கூடுதலாக 41.99 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 4 : ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை" என்பதன்கீழ் 34.13 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதனால் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு வழிவகை முன்பணமாக அரசு 25.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 8 : கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை மற்றும் பயிற்சி உதவித் தொகை வழங்குவதற்காக 26.63 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. மேலும், இந்த வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்காக 108 அரசு மாணவரில்லங்கள் அமைப்பதற்காக 4.75 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை

@ பக்கம் 5 முதல் 7 வரை அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 27

எண் 9 : பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" என்பதன்கீழ் 31.38 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொள்முதல் ஆதரவு வழங்குவதற்காக 300.00 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12 : கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் 294.45 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

7. 2006 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்திற்காகச் சேலைகள் மற்றும் வேட்டிகள் வாங்குவதற்கு 256.00 கோடி ரூபாய் வழங்க அரசு அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 16 : கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை – துணி நூல்" என்பதன்கீழ் 81.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்ந்தளித்தல் வகையில் 165.00 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 33 : நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் 27.26 கோடி ரூபாயும், "மானியக் கோரிக்கை எண் 40 : ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் 43.54 கோடி ரூபாயும் சேர்க்கப்பட்டுள்ளது.

9. வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 1,472.80 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 49 : இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்பு" என்பதன்கீழ் 1,356.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–05

10. 1–1–2006 முதல் அரசு அலுவலர்களின் 50 சதவீத அகவிலைப் படியினை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்கீழும் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2006 ஜனவரி 27] [திரு. சி. பொன்னையன்]

2005-2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

[பக்கம் 3-ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

		ரூபாய் ஆயிரத்தில்		
கோரிக்கை	துறை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	5,56,26	...	...
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	2,52,22	...	...
3	நீதி நிருவாகம்	15	...	...
4	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	35,38,70	4	...
5	வேளாண்மைத் துறை	86	10	16,34,25
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு	15,02,06	1	68,30
7	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம்	6,07,30	25,40,81	...
8	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால் வளம்	48,16	...	25,00,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	54,21,28	54,98	...
10	வணிக வரித் துறை - வணிக வரிகள்	12	...	...
11	வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு	51,36	...	...
12	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	74,75,55	...	319,44,96
13	எரிசக்தித் துறை	6	...	1
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	9,57,13	9	...
15	நிதித் துறை	100,33,43	...	2
16	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணி நூல்	112,85,11	...	11,57,03

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 27

		ரூபாய் ஆயிரத்தில்		
கோரிக்கை	**துறை**	**வருவாய்**	**மூலதனம்**	**கடன்**
17	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	1,24,12	...	...
18	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	87	1	...
19	உயர் கல்வித் துறை	40,27,90	27,13	...
20	நெடுஞ்சாலைகள் துறை	19,01,48	17	...
21	உள் துறை-காவல்	99,20,24	3	1,49,99
22	உள் துறை — தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	9	...	...
23	உள் துறை — சிறைச்சாலைகள்	7	1	...
24	உள் துறை — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் — நிர்வாகம்	11	...	...
25	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	8	3	...
26	தொழில் துறை	6	7,17,32	77,64,73
27	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம்	6,77,06	...	...
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா	13,83,17	...	...
29	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு	3	...	...
30	தகவல் தொழில்நுட்பவியல் துறை	7,57,32	...	...
31	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	11	77,83	...
32	சட்டத் துறை	17,60	...	...
33	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	72,22,81	4	61,73,00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 27] [திரு. சி. பொன்னையன்]

கோரிக்கை	துறை	வருவாய்	மூலதனம்	கடன்
		ரூபாய் ஆயிரத்தில்		
34	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	6	...	...
35	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	14,91	1,13,16	...
36	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	35,83	...	...
37	பொதுத் துறை	67,43,13	...	...
38	பொதுப் பணித் துறை	40	50	...
39	வருவாய்த் துறை	33	16,01,91	...
40	ஊரக வளர்ச்சித் துறை	256,55,40	28,30,42	...
41	பள்ளிக் கல்வித் துறை	30	150,00,00	...
42	சிறு தொழில்கள் துறை	6	83,06	6,83
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	60,20,32	1,51,89	...
44	தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு	7	1	...
45	தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை- இந்து சமய அறநிலையத் துறை	9	1,69,69	...
46	போக்குவரத்துத் துறை	1,63,86	6,33	80,00,00
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	21,35,78	98,61	2,50,00
48	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	18	...	...
49	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,419,42,02	...	...
	பெரு மொத்தம்	**2,504,75,61**	**234,74,18**	**596,49,12**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS